தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ் நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம்,, புது எண் 378, அண்ணா சாலை, தேனாம்பேட்டை சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
*தொலைபேசி எண் 24312841.*

**வழக்கு எண்.14833/விசாரணை/2008**

**விசாரணை நடைபெற்ற நாள் 28.01.2010.**

| | |
|---|---|
| முன்னிலை: | முனைவர் ஆர். பெருமாள்சாமி,<br>எம்.ஏ.,எம்ஃபில்.,பி.எச்.டி.,<br>மாநில தகவல் ஆணையர்.<br><br>முனைவர் (திருமதி) சாரதா நம்பி ஆரூரன்,<br>எம்.ஏ.,எம்.ஃபில்,,பி.எச்,டி.,<br>மாநில தகவல் ஆணையர் |
| மனுதாரர்: | திரு D.அழகிரி,<br>6–B, பாவுக்கார வீதி,<br>மாலுமியார்பேட்டை,<br>கடலூர் – 607 003. |
| பொது அதிகார அமைப்பு: | பொதுத் தகவல் அலுவலர்,<br>முதுநிலை பணித்தொகுதி அலுவலர்/ஆய்வு,<br>(நிர்வாகக் கிளை)<br>தமிழ்நாடு மின்சார வாரியம்,<br>144, அண்ணா சாலை,<br>சென்னை – 600 002. |

*****

மனுதாரர் திரு D.அழகிரி மற்றும் பொதுத் தகவல் அலுவலர் திரு முகமது அப்துல் ரஹ்மான் குரேஷி, முதுநிலை பணித்தொகுதி அலுவலர்/ஆய்வு, தமிழ்நாடு மின்சார வாரியம், சென்னை மற்றும் திருமதி D.ரத்னமாலா இன்று (27.01.2010) இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு வந்திருந்தனர்.

மனுதாரர் 13.07.2007 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, சட்டப் பிரிவு 6(1)–ன் கீழ் தமிழ்நாடு மின்சார வாரியப் பொதுத் தகவல் அலுவலரிடம் 26 இனங்களில் தகவல்களைக் கேட்டிருக்கின்றார். 26.10.2007 அன்று எல்லா வினாக்களுக்கும் தகவல்கள்

தரப்பட்டுள்ளன. தவறான தகவல்கள் தரப்பட்டதாக ஆணையத்திற்கு மேல் முறையீடு செய்ததால் 30.01.2009 அன்று ஆணையம் இதே வழக்கினை விசாரித்துள்ளது. மனுதாரரின் வினா எண்.2,5,8,9,10,13,16 ஆகிய இனங்களுக்கு உரிய தகவல்கள் தரப்பட்டிருந்தும், முழுத் தகவல்கள் தரப்படாததால் 10 தினங்களுக்குள் உரிய தகவலை மனுதாரருக்கு இலவசமாகத் தரும்படி ஆணையம் ஆணையிட்டிருந்தது. 10.02.2009 அன்று விடுபட்ட 2,5,8,9,10,13,16 ஆகிய இனங்களுக்குத் தகவல்கள் தரப்பட்டுள்ளன. முன்னுக்குப் பின் முரணான தகவல்கள் உள்ளதாகவும், முழுமையற்ற தகவல்கள் தரப்பட்டுள்ளதாகவும் மனுதாரர் மீண்டும் சட்டப் பிரிவு 19(3)–ன் கீழ் ஆணையத்திற்கு மேல் முறையீடு செய்ததன் அடிப்படையில் வழக்கு இன்று (27.01.2010) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மனுதாரர் கேட்ட ஒவ்வொரு இனமும் தனித்தனியாக விரிவாக விசாரிக்கப்பட்டன. 2–வது இனத்திற்குப் பொதுத் தகவல் அலுவலர் அளித்துள்ள விளக்கம் முன்னுக்குப் பின் முரணாக உள்ளதை உணர முடிகின்றது. 5–வது இனத்திற்கு மனுதாரர் அரசு விதி நகல் கேட்டிருக்கின்றார். அரசு விதி எதுவும் இல்லையெனவும், வாரிய ஆணையைப் பின்பற்றித் தான் பணி நியமனம் செய்யப்படுவதாகவும் பதில் அளிக்கப்பட்டுள்ளது. கேட்கப்பட்ட கேள்வியான அரசு விதியின் நகல் குறித்த தகவல்கள் தெரிவிக்கப்படவில்லையென்று ஆணையம் கருதுகின்றது. 8,10,13 இவற்றிற்கு பொதுத் தகவல் அலுவலர் அளித்துள்ள தகவல்கள் மனுதாரரால் ஏற்றுக் கொள்ளப்பட்டன. 9,16 ஆகிய 2 இனங்களுக்கு உரிய தகவல்களை விசாரித்த போது 08.07.1997–ல் தொழில் நுட்ப உதவியாளர் பதவிக்கு அறிவுத் திறமைப் போட்டி எங்கு, எப்படி நடத்தப்பட்டது எனவும், கலந்து கொண்டவர்கள் எத்தனை பேர் எனவும், அதனுடைய ரிக்கார்டு நகல் மனுதாரர் கேட்டுள்ளார். பொதுத் தகவல் அலுவலரிடம் இது குறித்து கேட்டபொழுது சென்னை, திருச்சி, ஈரோடு, கோயம்புத்தூர், வேலூர், விழுப்புரம், மதுரை, திருநெல்வேலி ஆகிய 8 இடங்களில் 1997–ல் நேர்முகத் தேர்வு நடைபெற்றதாகவும், அதில் கலந்து கொண்டவர்கள் 37,716 பேர்கள் எனவும், அதில் மனுதாரர் குறிப்பிடுகின்ற 08.07.1997–ல் விழுப்புரத்தில் கலந்து கொண்ட நேர்முகத் தேர்வாளர்கள் பற்றித் தேடுவது கடினமென்றும் பொதுத் தகவல் அலுவலர் கூறினார். விசாரணை முடிவில் கீழ்க்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

1. 2–வது இனத்திற்கு பொதுத் தகவல் அலுவலர் அளித்துள்ள முன்னுக்குப் பின் முரணான தகவல்களுக்குச் சரியான விளக்கம் அளிக்கப்படல் வேண்டுமென பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையிடப்படுகிறது.

2. 2 மற்றும் 5–வது இனங்களுக்கு உரிய தகவல்களை இவ்வாணை பெறப்பட்ட ஒரு வாரத்திற்குள் மனுதாரருக்கு அனுப்பி, ஒப்புகை பெற்று அதன் விவரத்தை ஆணையத்திற்குத் தெரிவிக்கும்படி பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையிடப்படுகிறது.

3. 08.07.1997–ல் விழுப்புரத்தில் கலந்துகொண்ட நேர்முகத் தேர்வாளர்கள் பற்றிய தகவலை இவ்வாணை பெறப்பட்ட 15 நாட்களுக்குள் தேடிப் பார்த்து மனுதாரருக்குத் தரவேண்டுமெனவும், தேடிப் பார்த்தபின் கிடைக்கவில்லையென்றால், உரிய சான்றிதழுடன் பிரமாண வாக்குப் பத்திரம் (Affidavit) ஆணையத்திற்கு அளிக்க வேண்டுமெனவும் பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையிடப்படுகிறது.

4. 30.01.2009 அன்று ஆணையம் விசாரித்து விடுபட்ட இனங்களுக்குத் தகவல்கள் வழங்கச் சொல்லி ஆணையிட்ட பிறகும், ஓராண்டு காலத்திற்குப் பிறகு முழுமையற்ற தகவல்களை வழங்கியுள்ள பொதுத் தகவல் அலுவலர் மீது தகவல் அறியும் உரிமைச் சட்டம் விதி 20(1)–ன் கீழ் ஏன் அதிகபட்ச அபராதம் விதிக்கலாகாது என்பதற்குரிய விளக்கத்தைப் பெற்று இவ்வாணை பெறப்பட்ட ஒரு மாதத்திற்குள் ஆணையத்திற்கு அளிக்குமாறு **தலைவர், தமிழ்நாடு மின்சார வாரியம், சென்னை** கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**ஒப்புதல் பெறப்பட்ட நாள் 03.02.2010**
**ஆணையத்தின் ஆணைப்படி**

**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

**(சு.மோகன தாஸ்)**
**உதவி பதிவாளர்**

பெறுநர்

**<u>வழக்கு எண்.14833/விசாரணை/2008</u>**

தலைவர்,
தமிழ்நாடு மின்சார வாரியம்,
144, அண்ணா சாலை,
சென்னை – 600 002.

பொதுத் தகவல் அலுவலர்,
முதுநிலை பணித்தொகுதி அலுவலர்/ஆய்வு,
(நிர்வாகக் கிளை)
தமிழ்நாடு மின்சார வாரியம்,
144, அண்ணா சாலை,
சென்னை – 600 002.

திரு D.அழகிரி,
6–B, பாவுக்கார வீதி,
மாலுமியார்பேட்டை,
கடலூர் – 607 003.

*"ptl"*